15.02.2023 OS.No.68/2013 DW.1 Sagunthala

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2வது பிரதிவாதி பெருமையின் தாயார் பெயர் வள்ளியம்மாள் தகப்பனார் பெயர் கோவிந்தசாமி. வள்ளியம்மாள் எப்போது இறந்தார் என்பது தெரியாது. 2வது பிரதிவாதி 01.06.2014 அன்று இறந்துவிட்டார். 2வது பிரதிவாதி பெருமையுடன் உடன்பிறந்தவர்கள் 6 பேர். மூத்தவர் பெயர் புதுமை. கடைசி பெண் பெயர் அஞ்சுகம். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 6வது பக்கம் 10வது பத்தியில் நான் என்ன சொல்லியுள்ளேன் என்பது எனக்கு தெரியாது. (சாட்சி பிரமாண பத்திரத்தை படித்துப் பார்த்து சாட்சி அளித்தார்) தாவா சொத்து நாங்கள் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அதில் பாகம் கேட்க பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று சொல்லியுள்ளது. 6வது பக்கம் 10வது பத்தியில் சொல்லப்படடுள்ள சங்கதிகள் வேறு என்றாலும்நான் சொன்னது போல் அதில் இல்லை என்றாலும் சரியல்ல. 2வது பிரதிவாதி பெருமை மற்ற குடும்ப நபர்களுடன் எந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் வேலூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தாக்கல் செய்துள்ளார். குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் சொத்திற்காக எங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். வள்ளியம்மாள் மற்றும் புதுமையும் சேர்ந்து குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியவில்லை. குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது கணவர் வழக்கு ஏதும் நடத்துகிறாரா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. அசல் வழக்கு எண் 64/2012 என்ற வழக்கை புதுமை என்பவர் பெருமை என்பவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

அந்த வழக்கு தற்போது எந்த நிலைமையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில அசல் வழக்கு எண் 64/2012 நடந்ததா என்று எனக்கு தெரியாது. என் கணவர் பெருமைக்கு தான் தெரியும். அவர் உயிருடன் இருக்கும் வரை அந்த வழக்கை நடத்தி வந்தார் என்றால் இல்லை. குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு 64/2012 என்ற வழக்கை என் கணவர் பெருமையும் அவர் குடும்பத்தினர் 6 பேரும் தான் சேர்ந்து நடத்தினார்கள் என்றால் இல்லை. அந்த வழக்கானது அவர் பங்காளிகளான பாபு பலராமன் நாகராஜ், பொம்மி மற்றும் 16 நபர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி வந்தார்கள் என்றால் இல்லை. என் கணவர் பெருமை குடும்பத்து சொத்து விஷயங்களோ எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் கணவர் பெருமை வாங்கிய சொத்து விஷயங்கள் பற்றி மட்டும் எனக்கு தெரியும். என் கணவர் லிவர் பிரச்சனை யால் இறந்து விட்டார். அவர் பெங்களூரில் உள்ள ராஜசேகர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது இறந்துவிட்டார். பல வருடங்கள் நோயால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தோம் அப்போது இறந்துவிட்டார். சுமார் 5 வருடங்களாக மருத்துவ சிகிச்சையில் இருந்தார். எனது கணவரின் சகோதரி அமைதி என்பவர் தட்டப்பாறை ஊரிலும், அஞ்சுகம் என்பவர் பெங்களூரிலும் வசித்து வருகிறார்கள். எனக்கு கன்னடம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் பேசத் தெரியாது. என் கணவர் பெருமை பெங்களூரில் மருத்துவ சிகிச்சையில் இருக்கும்போது என்ன அருவை சிகிச்சை செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மருத்துவருக்குதான் தெரியும். 01.06.2014 அன்று தான் அறுவை சிகிச்சை செய்தோம். மற்ற சிகிச்சை பெற்ற தேதிகள் நியாபகம் இல்லை. என் கணவர் பெருமை பெங்களூருக்கு சிகிச்சையில் இருக்கும்போது அவரது கடைசி சகோதரர் ஜெயக்கொடிதான் அவருக்கு அருகில் இருந்து அனைத்து சவரட்சனைகள் செய்தார் என்றால் இல்லை. நானும் என் தம்பியும் தான் செய்தோம். என் கணவர் பெருமைக்கு அந்தநோய் பரம்பரையாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. பெருமைக்கு இருந்த புற்றுநோய் பரம்பரை நோய் என்பதால் குடும்பத்தில் உள்ள அனைவரையும் அழைத்து பரிசோதனை செய்தார்கள் என்றால் இல்லை. என் கணவர் பெருமையுடைய மருத்துவ அறிக்கைகள் என்னிடம் உள்ளது. அவர் எந்த நாளிலிருந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார் எந்த நாள் வரை சிகிச்சை பெற்று இறந்தார் என்ற விவரம் அந்த மருத்துவ அறிக்கையில் உள்ளதா என்றால் பார்த்தால் தான் தெரியும். நான் எந்த வழக்கிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் தெரியும். என்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பபட்டது என்றால் தேதி மாதம் நியாபகம் இல்லை. 2013 ல் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும்போதே இந்த வழக்கில் வழக்கு சொத்துக்களை விற்கக்கூடாது என்று இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். இடைக்கால மனு எண் 102/2013 என்றால் எனக்கு நியாபகம் இல்லை. இந்த வழக்கு குறித்து எனக்கு 2013லியே தெரியும். 13.05.2013ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அதிலிருந்து 15 நாட்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன். இந்த அசல் வழக்கும் அதில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு குறித்தும் என் கணவர் எனக்கு உடனே தகவல் சொல்லிவிட்டார் என்றால் சொல்லவில்லை. வழக்கு சங்கதிகள் எதுவும் விவரம் ஏதும் தெரியாது என்றாலும் இந்த வழக்கை நடத்துவதற்காக வழக்கு விவர்ங்கள் தெரியும் என்கிறேன் என்றால் சரியல்ல. என் தரப்பில பதில் வழக்குரை எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியாக நியாகம் இல்லை. வருடமும் நியாபகம் இல்லை. பதில் மனுவில் என்ன விவரம் சொல்லியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. எங்களது பதிலுரையில் நாங்கள் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் வாதிக்கு பாகம்கேட்க எவ்வித உரிமையும் கிடையாது என்று சொல்லியுள்ளேன். 6வது பிரதிவாதி ரவிச்சந்திரன், 7வது பிரதிவாதி பாரத். இவர்களை 40 வருடங்களாக தெரியும். 6ம் பிரதிவாதி ரவிச்சந்திரன் எங்களுடைய ஜாதியை சேர்ந்தவர்களா என்றால இல்லை. ஒரே ஊர் காரர்கள். கள்ளூரைச் சேர்ந்தவர்கள். 7ம் பிரதிவாதி பாரத் எங்கள் ஊர் காரர். 6வது மற்றும் 7வது பிரதிவாதியும் எந்த சொத்தை

வாங்கினார்கள் என்றால் சர்வே எண்.245 - 1டி, பாக்கம் பஞ்சாயத்தில் வாங்கினார்கள். இரண்டு பேர் பெயரில் வாங்கப்பட்டது. ஆனால் 5 பேர் பார்ட்னராக சேர்ந்து வாங்கினார்கள். மீதி மூன்று பேர், 1. ரவி அப்பா பெயர் தெரியாது. கள்ளூரைச் சேர்ந்தவர். தற்போது குடியாத்தம் எம்எல்ஏ. 2.மணி கவுண்டர் மற்றொருவர் பெயர் தெரியாது. மொத்தம் எத்தனை கோடி ரூபாய்க்கு சொத்து விற்றோம் என்றால் அது என் கணவருக்குதான் தெரியும். சொத்து மதிப்பு தற்போது 3 கோடிக்கு மேல் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்தபோது சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்பது என் கணவருக்கு தான் தெரியும். ஒரு சொத்தை வாங்கிய தேதி 06.12.2000 அன்று சி.ஜி திருநாவுக்கரசு என்பவர் இடம் இருந்து பெருமை கிரயம் பெற்றார். எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினார்கள் என்ற விவரம் தெரியாது. வழக்கு அட்டவணை சொத்து மொத்தம் 3 சொத்துக்கள். 3 சொத்துக்களுமே யார் யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மற்ற இரண்டு அட்டவணை சொத்து மதிப்பு எனக்கு தெரியாது. வழக்கின் 3 அட்டவணை சொத்துக்களுமே யார் யாரிடம் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு நன்கு தெரியும். அசல் வழக்கு எண்.64/2012 குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் ெய்ததை" இ " கோர்ட் வெப் காப்பி சாட்சியத்திடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி தனக்கு படிக்கத் தெரியாது என்று சொல்லிவிட்டார். 64/2012 குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதை இறந்துபோன பெருமை மற்றும் அவருடைய சகோதரர்கள் தான் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றாலும் அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் சொத்து விவரம் 37/1, 37/4, 40/4, 40/5, சீவூர் பஞ்சாயத்து இந்த நான்கு சொத்துக்களின் மேலும் எனது கணவர் பெருமையும் மற்றும் அவரது குடும்ப நபர்கள் புதுமையும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் இல்லை. அந்த வழக்கு பாகப் பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிந்த கவுண்டர் அவரது மனைவியை எப்படி திருமணம் செய்துக் கொண்டார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA